தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

3.04.2013 A.M

## கொப்பரைக் கொள்முதல்: மத்திய அரசு உத்தரவால் விவசாயிகள் அதிர்ச்சி

கொப்பரைக் கொள்முதல் தொடர்பாக மத்திய அரசின் உத்தரவால் தென்னை விவசாயிகள் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர்.

தமிழகத்தில் தேங்காய் விலை குறைந்தபோது விவசாயிகளுக்கு ஆதரவாகக் கொப்பரையை மத்திய அரசு நிறுவனமான தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் (நேபட்), தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் (டேன்பெட்) மூலமாக குறிப்பிட்ட வேளாண் கூட்டுறவு சங்கங்களில் இருந்து தமிழகம் முழுவதும் கொள்முதல் செய்தது.

வியாபாரிகளுக்குப் பலன்: விவசாயிகளுக்கு உதவுவதற்காகக் கொண்டு வரப்பட்ட இக் கொள்முதலால் பயனடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கொப்பரை வியாபாரிகள் தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு விவசாயிக்கும் இருந்த நிலத்தின் அளவு, தென்னை பயிரிடப்பட்டிருந்த நிலத்தின் அளவு, அதிலிருந்து கிடைக்கும் கொப்பரையின் அளவு குறித்து வேளாண் துறையும் வருவாய்த் துறையும் அடையாள அட்டை வழங்கியிருந்தனர். இந்த அட்டையை வைத்துத்தான் கொப்பரையைக் கொண்டு வரலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த அடையாள அட்டையை வைத்துப் பயனடைந்தவர்களில் 99 சதவீதத்தினர் வியாபாரிகள் தான். சில விவசாயிகளைத் தவிரப் பிற விவசாயிகள் யாரும் கொப்பரையைத் தயாரிப்பதில்லை. எனவே, எப்போது கொப்பரைக் கொள்முதல் என்றாலும் பயனடைவது வியாபாரிகள் மட்டுமே. இச் சூழ்நிலையில் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து குறைந்தபட்ச ஆதரவு விலையாக கொப்பரை கிலோ ரூ.51 வீதம் கொள்முதல் செய்யப்பட்டது. இப்போது ரூ.52.90-க்கு வாங்கப்படுகிறது. கடந்த ஆண்டு தமிழகத்தில் சுமார் 29 ஆயிரம் டன், கேரளத்தில் 17 ஆயிரம் டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு வரை எவ்வளவு டன் கொப்பரை கொள்முதல் செய்தாலும் கொள்முதல் விலையை விடக் குறைவான விலைக்கு விற்கும்போது நாபெட்டுக்கு உண்டாகும் நஷ்டம் முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டுவிடும்.

ஆனால், இப்போது அதிகபட்சமாக 15 சதவீத நஷ்டத்துக்கு உண்டான தொகையை மட்டும் தர முடியும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இதுதொடர்பாக "நேபட்' அலுவலர் ஒருவர் கூறுகையில், கொள்முதல் செய்வதில் 15 சதவீத நஷ்டத்தை மட்டும் மத்திய அரசு ஏற்கும் என்று தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. இது தொடர்பாக உத்தரவு இதுவரை வரவில்லை. எனினும் கொப்பரைக் கொள்முதல் தொடர்பாக மீண்டும் உத்தரவு வந்தால் மட்டும் துவங்கப்படும் என்றார்.

இது தொடர்பாக, பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே.சுகுமார் கூறியது: கொப்பரைக் கொள்முதல் செய்வதில் 15 சதவீத நஷ்டத்தை மட்டும் மத்திய அரசு ஏற்கும் என்று தெரிவித்ததை அடுத்து வேளாண் துறை அமைச்சர் சரத்பவாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. மத்திய நிதியமைச்சகம் தான் இந்த உத்தரவை பிறப்பித்ததாக சரத்பவார் தெரிவித்தார். நிதியமைச்சரிடம் இது தொடர்பாக அவரே பேசுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த பிப்ரவரி மாதம்முதல் கொப்பரைக் கொள்முதல் விலை ரூ.52.90 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதை ரூ.60 ஆக உயர்த்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

கோதுமை, நெல் உள்ளிட்ட பொருள்கள் கொள்முதலுக்கு இப் பிரச்னையில்லை. ஆனால், தமிழகம் மற்றும் கேரளத்தில் அதிகமாக உற்பத்தியாகும் கொப்பரைக்கு மட்டும் நிதியமைச்சகம் கட்டுப்பாடு விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வியாபாரிகளுக்குப் பல கோடி நஷ்டம்

பருவமழை பெய்யாததால் கொப்பரையின் எடை குறைந்ததால் வியாபாரிகளுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் வாழ்நாள் பயிரான தென்னை அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு சுமார் 1000 உலர் களங்கள் உள்ளன. விவசாயிகளிடம் இருந்து தேங்காயை வாங்கும் வியாபாரிகள், அவற்றை உடைத்துக் காய வைத்து கொப்பரையாக்குவார்கள்.

பொதுவாக, 1000 தேங்காய்களை உடைத்தால் சுமார் 160 கிலோ கொப்பரை கிடைக்கும். ஆனால், மழை இல்லாததால் அளவு சிறுத்துப்போன தேங்காய்களால் சுமார் 130 கிலோ கொப்பரை மட்டுமே கிடைக்கிறது. இதனால், கிலோவுக்கு சுமார் ரூ.44 வீதம் குறைவாகக் கிடைக்கிறது. 30 கிலோவுக்கு ரூ.1,320 வீதம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் வியாபாரிகளுக்குப் பல கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இப் பிரச்னையால் விவசாயிகளிடம் அதிகபட்சமாக தேங்காய் ரூ.5-க்குத்தான் கொள்முதல் செய்யப்படுகிறது.

இது தொடர்பாக, கோவை மாவட்ட தேங்காய் உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள் சங்கத் தலைவர் நல்லாம்பள்ளி நாச்சிமுத்து கூறியது:

பருவமழை உரிய நேரத்தில் பெய்யாததால் தேங்காயின் அளவு குறைந்துள்ளது. இதனால், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. மழை இல்லாததால் பல ஆயிரம் ஏக்கரில் தென்னை மரங்கள் கருகத் துவங்கியுள்ளன. மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்குத் தகுந்த நஷ்டஈடு தர வேண்டும் என்றார்.

பிரச்னைக்கு விரைவில் தீர்வு: அமைச்சர்

கொப்பரைக் கொள்முதல் தொடர்பான பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என, வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, "தினமணி' செய்தியாளரிடம் செவ்வாய்க்கிழமை அவர் கூறியது:

நேபட் மூலமாக கொள்முதல் செய்யப்படும் கொப்பரையில் 15 சதவீத நஷ்டத்தை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனால், கொப்பரைக் கொள்முதல் தமிழகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக ஆலோசனை நடத்தப்படுகிறது. இப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றார்.

## ராஜபாளையம் பகுதியில் நுங்கு விற்பனை அமோகம்

ராஜபாளையம் மற்றும் சுற்றுப்பகுதியில் கடந்த சில நாள்களாக கடும் கோடைவெயில் வாட்டி எடுத்து வருகிறது.  கோடைவெயிலுக்கு இதமான பனை நொங்கு விற்பனைஅதிகரித்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து ஏராளமான விற்பனையாளர்கள் ராஜபாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் இரு சக்கர வாகனத்தில் வந்து பனை நொங்கு விற்று வருகின்றனர். ஒரு நொங்கு ரூ 15க்கும் பதநீர் ஒருபாட்டிலல் ரூ25 க்கும் விற்றுவருகின்றனர்.

## மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கல்

ராமநாதபுரத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையிலான வேளாண் கருவிகளை ஆட்சியர் நந்தகுமார் வழங்கினார்.

வேளாண்மை பொறியியல் துறை சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் நந்தகுமார் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 23 விவசாயிகளுக்கு மானிய விலையிலான ரூ.12,98,576 மதிப்புள்ள வேளாண்கருவிகளை வழங்கினார்.  இதில் 19 ஆதிதிராவிட விவசாயிகளும், 4 இதர விவசாயிகளும் பயன்பெற்றனர்.

நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் யுவராஜ், வேளாண் அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.31 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 42.31 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 388 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.84 டி.எம்.சி.

### ரூ. 38 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டை வேளாண்மைக் கூட்டுறவு விற்பனையாளர்கள் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் ரூ.38 லட்சத்திற்கு மஞ்சள் வர்த்தகம் நடைபெற்றது.

தமிழகத்தில் ஈரோட்டிற்கு அடுத்து, நாமகிரிப்பேட்டை பகுதி மஞ்சள் உற்பத்திக்கு முக்கியத்தும் பெற்றுள்ளது.

இங்குள்ள கூட்டுறவு சங்கத்தில் வாரம் தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறும்.

இதில் தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிளில் உள்ள விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். இந்தக் கூட்டுறவு சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.65 கிலோ கொண்ட 938 மூட்டைகள் ஏல விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன.

இதில் விரலி ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ. 9 ஆயிரத்து 699-க்கும், குறைந்த பட்சமாக ரூ. 6 ஆயிரத்து 899-க்கும் ஏலம் போனது.

அதேபோல, உருண்டை ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ. 7 ஆயிரத்து 500-க்கும் குறைந்தபட்சமாக ரூ. 6 ஆயிரத்து 399-க்கும் விலை போனது.

பனங்காலி ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ.17 ஆயிரத்து 500-க்கும், குறைந்தபட்சமாக ரூ.12 ஆயிரத்து 777-க்கும் ஏலம் போனது. ஒரே நாளில் ரூ.38 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது.

### நிழல் வலையில் காய், கனி சாகுபடி: ஏப். 9-இல் இலவசப் பயிற்சி

நிழல் வலையில் தக்காளி, கொத்தமல்லி, புதினா, கீரை சாகுபடி செய்வது குறித்து, நாமக்கல்லில் ஏப்ரல் 9-ஆம் தேதி விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிழல் வலையில் தக்காளி, கொத்தமல்லி, புதினா மற்றும் கீரை சாகுபடி செய்வது குறித்த ஒருநாள் இலவசப் பயிற்சி நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஏப்ரல் 9-ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) நடத்தப்பட உள்ளது. இந்தப் பயிற்சியில் நிழல் வலைகளில் காய்கறிகள், கீரை வளர்ப்பதன் முக்கியத்துவம், அமைக்கும் முறைகள், சாகுபடி செய்யப்படும் காய்கறிகள், கீரை வகைகள், நாற்றுகள் உற்பத்தி, பசுமைக் குடில்களில் வளர் மேடை அமைக்கும் முறை, நீர்ப்பாசன முறை, ஒருங்கிணைந்த உர மேலாண்மை, அடியுரம், நீர்வழி உரமளித்தல், நிலப் போர்வை அமைத்தல், வடிவமைப்பு மற்றும் அறுவடை குறித்த விளக்கங்கள் அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரிலோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு வரும் 8-ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெல்டா விவசாயிகளை ஏமாற்றிய தமிழக பட்ஜெட்

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் டெல்டா மாவட்ட விவசாயத்தை பாதுகாக்கும் வகையில் அறிவிப்பு ஏதும் இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர் என திமுக குற்றம் சாட்டியுள்ளது.

மன்னார்குடி நகர திமுக இளைஞரணி சார்பில் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நா. இளையராஜா தலைமை வகித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு திமுக தலைமை கழகப் பேச்சாளர் சோம்.இளங்கோவன் மேலும் பேசியது:

நிகழாண்டில் இயற்கை பொய்த்து போனதால் சம்பா சாகுபடியும்,கர்நாடகம் காவிரியிலிருந்து தமிழகத்துக்கு உரிய தண்ணீரை தராமல் வஞ்சகப் போக்குடன் நடந்து கொண்டதால் குறுவை

சாகுபடி செய்ய முடியாமல்,காவிரி பாசனப் பகுதியில் 17 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

அவர்களின் குடும்பத்துக்கு நிவாரணமாக தலா ரூ.10 லட்சம் வழங்கிட வேண்டும் என கட்சிகளை கடந்து அனைவரும் வலியுறுத்தியபோதும், அதனை ஏற்காமல் சொற்ப தொகையை வழங்கப்பட்டுள்ளது. நிதி நிலை அறிக்கையில் உரிய இழப்பீடும், விவசாயப் பணிக்கு பாதுகாப்பு அம்சங்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் விவசாயத்துக்கு முடிவுரை எழுதும் வகையில் நிதிஅமைச்சர் நிதிநிலையை தாக்கல் செய்துள்ளார் என்றார்.

கூட்டத்தில் மாவட்டச் செயலர் பூண்டி கே. கலைவாணன், தலைமை கழகப் பேச்சாளர் அறந்தாங்கி வெங்கடேசன், முன்னாள் அமைச்சர் அழகு.திருநாவுக்கரசு, தொகுதி எம்எல்ஏ டி.ஆர்.பி. ராஜா, முன்னாள் எம்எல்ஏக்கள் பி. ராஜமாணிக்கம், சா. ஞானசுந்தரம், நகரச்செயலர் ராஜ.பூபாலன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**3.04.2013 A.M**

---

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் டெல்டா மாவட்ட விவசாயத்தை பாதுகாக்கும் வகையில் அறிவிப்பு ஏதும் இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர் என திமுக குற்றம் சாட்டியுள்ளது.

மன்னார்குடி நகர திமுக இளைஞரணி சார்பில் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நா. இளையராஜா தலைமை வகித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு திமுக தலைமை கழகப் பேச்சாளர் சோம்.இளங்கோவன் மேலும் பேசியது:

நிகழாண்டில் இயற்கை பொய்த்து போனதால் சம்பா சாகுபடியும்,கர்நாடகம் காவிரியிலிருந்து தமிழகத்துக்கு உரிய தண்ணீரை தராமல் வஞ்சகப் போக்குடன் நடந்து கொண்டதால் குறுவை சாகுபடி செய்ய முடியாமல்,காவிரி பாசனப் பகுதியில் 17 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

அவர்களின் குடும்பத்துக்கு நிவாரணமாக தலா ரூ.10 லட்சம் வழங்கிட வேண்டும் என கட்சிகளை கடந்து அனைவரும் வலியுறுத்தியபோதும், அதனை ஏற்காமல் சொற்ப தொகையை வழங்கப்பட்டுள்ளது. நிதி நிலை அறிக்கையில் உரிய இழப்பீடும், விவசாயப் பணிக்கு பாதுகாப்பு அம்சங்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் விவசாயத்துக்கு முடிவுரை எழுதும் வகையில் நிதிஅமைச்சர் நிதிநிலையை தாக்கல் செய்துள்ளார் என்றார்.

கூட்டத்தில் மாவட்டச் செயலர் பூண்டி கே. கலைவாணன், தலைமை கழகப் பேச்சாளர் அறந்தாங்கி வெங்கடேசன், முன்னாள் அமைச்சர் அழகு.திருநாவுக்கரசு, தொகுதி எம்எல்ஏ டி.ஆர்.பி. ராஜா, முன்னாள் எம்எல்ஏக்கள் பி. ராஜமாணிக்கம், சா. ஞானசுந்தரம், நகரச்செயலர் ராஜ.பூபாலன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

3.04.2013 A.M

## 2012,13ம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 2 சதவீதம் சரிவு



இந்திய சர்க்கரை உற்பத்தி ஆலைகள் சங்கம் (இஸ்மா) வெளியிட்ட அறிக்கை: நாட்டின் பல பகுதிகளில் கரும்பு அரவை முடியும் நிலைக்கு வந்துள்ளது. மொத்தம் உள்ள 520 ஆலைகளில் பாதிக்கும் மேற்பட்டவை அரவையை நிறுத்தியுள்ளன. கர்நாடகா, ஆந்திரா, பீகார், பஞ்சாப், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் விரைவில் அரவை நிறுத்தப்படும்.

மழை குறைவாக இருந்த நிலையிலும் மகாராஷ்டிராவில் இந்த ஆண்டு 77 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டைவிட 4 சதவீதம் குறைவு. உத்தரப்பிரதேசத்தில் 68 லட்சம் டன் சர்க்கரையும், கர்நாடகாவில் 33 லட்சம் டன் சர்க்கரையும் உற்பத்தி செய்யப்பட்டன. 2011,12ம் நிதியாண்டில் 2.60 கோடி டன் சர்க்கரை உற்பத்தியானது. 2012,13ம் நிதியாண்டில் சர்க்கரை உற்பத்தி சற்று குறைந்து 2.46 கோடி டன்னாக இருக்கும்.

## நீரின்றி பனை மரங்கள் காய்கின்றன

இடைப்பாடி, : சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட குரும்பம்பட்டி ஊராட்சியில், சாணாரப்பட்டி ஏரி உள்ளது. இந்த ஏரியை சுற்றியுள்ள பகுதியில் சுமார் 500க்கும் மேற்பட்ட பனை மரங்கள் உள்ளன. பருவமழை பொய்த்தது மற்றும் கடும் வெயில் காரணமாக இடைப்பாடி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள ஏராளமான மரங்கள் காய்ந்து வருகின்றன. இந்நிலையில், கடும் வறட்சியின் காரணமாக சாணாரப்பட்டி ஏரி பகுதியில் உள்ள சுமார் 300க்கும் மேற்பட்ட பனை மரங்கள் நீரின்றி காய்ந்து வருகின்றன. மரத்தின் மட்டைகள் உதிர்ந்து மொட்டையாக காட்சி அளிக்கிறது. இடைப்பாடி சுற்றுவட்டார பகுதிகளில் நிலவும் அதிக வெயிலால் பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர்.

**திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் ரூ.44கோடியே, 86லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை**

அனுப்பர்பாளையம்,: திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் கடந்த ஒரு வருடத்தில்(1.4.2012 முதல் 31.3.2013) மட்டும்  ரூ. ரூ.44கோடியே 86லட்சத்து 3 ஆயிரத்து 500 மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை நடைபெற்றுள்ளது.

திருப்பூர் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள வடக்கு உழவர் சந்தைக்கு, தினமும் அதிகாலை 3 மணிக்கே 6 அரசு பஸ்களில் சுமார் 500 விவசாயிகள் தங்களது விளை பொருள்களான அவரை, தக்காளி, கத்தரி, புடலை, பீர்க்கங்காய், பாகற்காய், சேனை, நிலக்கடலை, வாழை, வெங்காயம், கீரைவகைகள் ஆகியவறை  கொண்டுவந்து விற்று செல்கின்றனர். இங்கு, பல தரப்பட்ட விவசாயிகள் விளை பொருட்களை  கொண்டு  வருகின்றனர். கருவலூர், நம்பியாம்பாளையம், பொகளூர், அவிநாசி,  நம்பியூர், குன்னத்தூர், மலையப்பாளையம், பெருமாநல்லூர், சேவூர், கருமத்தம்பட்டி, ஊத்துக்குளி, இடுவாய் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த  சுமார் 600 விவசாயிகள் தங்களது விளை பொருட்களான காய்கறிகளை, இங்கு கொண்டு வந்து விற்று வருகின்றனர். இங்கு நாள் ஒன்றுக்கு, சுமார் 68 டன் வரை அனைத்து காய்கறிகளும் வருகின்றன.

திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம்(1.4.2012 முதல் 31.3.2013வரை)  2கோடியே 50லட்சத்து 18 ஆயிரத்து 405 கிலோ எடையுள்ள காய்கறிகள் இங்கு மொத்த விற்பனை செய்யப்பெற்றுள்ளது.

மேலும், திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம் மட்டும், மொத்தம் 69746 விவசாயிகள் உழவர் சந்தைக்கு தங்களது விளைபொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்து பயனடைந்துள்ளனர்.

31 லட்சத்து 28 ஆயிரத்து, 205 பேர் இங்கு வந்து பொருட்களை வாங்கிச்சென்று

பயனடைந்துள்ளனர். திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் கடந்த ஒரு வருடத்தில் மொத்தம் ரூ.44கோடியே 86லட்சத்து 3 ஆயிரத்து 500 மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் கூறுகையில்,

‘‘பருவ மழை பொய்த்துவிட்டதால், கிலோ ஒன்றுக்கு, வெண்டை-ரூ.20க்கும், கத்தரி-40க்கும் , புடலங்காய் ரூ.16க்கும், பாகற்காய்-ரூ 24.க்கும், தக்காளி ரூ.10க்கும், பீர்க்கங்காய்-ரூ.30க்கும், அவரைக்காய்ரூ.40க்கும்  கொத்தவரைக்காய் ரூ.24க்கும், பீட்ரூட், முள்ளங்கி ரூ.20க்கும், சுரைக்காய் ரூ,.8க்கும், பூசணிக்காய்-ரூ12க்கும், சின்னவெங்காயம் ரூ.28க்கும் பெரியவெங்காயம் ரூ.20க்கும் நேற்று, திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் விற்பனையானது. பச்சை மிளகாய்,, ரூ30லிருந்து ரூ.40 ஆக உயர்ந்துள்ளது. மேலும் உயர வாய்ப்புள்ளது.  சென்ற வாரம், கிலோவுக்கு ரூ.40 வரை விலை அதிகளவு விற்பனையான பவானி கத்தரிக்காய் நேற்று விலை வீழ்ச்சியடைந்தது. நேற்று கிலோ ஒன்றுக்கு விலை, ரூ. 20 ஆக (அதாவது பாதியாக) குறைந்தது.

இதேபோல,  சென்ற வாரம் கிலோவுக்கு விலை ரூ.30 வரை  விற்பனையான முருங்கைக்காய், நேற்று விலை வீழ்ச்சியடைந்து  கிலோ  ரூ. 15 ஆக அதாவது பாதியாக குறைந்தது. தக்காளி கிலோ ரூ. 6-க்கு விற்று வந்தது. நேற்று ரூ 11 வரை விலை உயர்ந்தது.

வெண்டைக்காய் பயிரிடுவதில்  விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டுவதில்லை. ஏனெனில், வெண்டைக்காய் பயிருக்கு  போதிய அளவு தண்ணீர் அடிக்கடி விட வேண்டும், வெண்டைக்காயை தினமும் பறிக்க வேண்டும், கடுமையான வெயிலாகவும்,வறட்சியாகவும் உள்ளதால், விரைவில் செடி வாடி வதங்கிவிடுகிறது. வெண்டைக்காய் பயிரிடுவதில்  விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டுவதில்லை.  இதனால் விளைச்சல் குறைந்து, வரத்தும் குறைந்து, வெண்டைக்காய்  விலை தற்போது (கிலோ ஒன்றுக்கு ரூ.42) இரட்டிப்பு உயர்வுஆனது.

திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த வருடம் 7538 விவசாயிகள் இங்கு வந்து, தங்களது விளை பொருட்களான 350 டன் காய்கறிகளை கொண்டுவந்து,  ரூ. 67 லட்சத்து 8ஆயிரத்து 895 மதிப்பிலான  காய்கறிகளை, திருப்பூர் வடக்கு உழவர் சந்தை குளிர் பதன கிடங்கு அறையில் பாதுகாப்பாக  சேமித்து வைத்து பின்னர் விற்று பயனடைந்துள்ளனர்‘‘என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 3.04.2013 A.M

---

**குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**

குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.5 வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 13–க்கான ஏலம் கடந்த மாதம் 27, 28 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 8 லட்சத்து 17 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 5 லட்சத்து 89 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 28 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

87 சதவீத தேயிலை தூள் விற்பனை

இந்த ஏலத்தில் 87 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.5 வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 150 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூள் 260 ரூபாய் என்று உயர்ந்தபட்ச விலையாக ஏலம் சென்றது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 85 ரூபாயில் இருந்து 89 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 155 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூள்

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 98 ரூபாயில் இருந்து 101 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 130 ரூபாயில் இருந்து 165 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 14–க்கான ஏலம் வருகிற 4, 5 ஆகிய தேதிகளில் நடை பெறுகிறது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 27 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

விவசாயிகள் கவலை

தேயிலை ஏல மையத்தில் விற்பனை செய்யப்படும் தேயிலை தூளின் விலையை பொறுத்தே பச்சை தேயிலைக்கான விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த ஏலத்தில் ரூ.5 வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளதால் பச்சை தேயிலைக்கும் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் விவசாயி கள் கவலை அடைந்துள்ளனர்